என்னதான் நாடு வளர்ச்சிப் பாதையில் பயணித்துக் கொண்டிருந்தாலும், தொழில் நுட்பம் அதன் உச்சத்தை தொட்டுவிட முனைந்தாலும், இன்னும் பல மலைகிராமங்கள் உலகை விட்டு துண்டிக்கப்பட்டிருக்கும் உயர்ந்த தீவுகளாகவே உள்ளன. போக்குவரத்து வசதி உட்பட பல அடிப்படை வசதிகள் இன்றித்தான் இருக்கின்றன.





### 'காவிரி காவலன்'

சேவ் மாம் நிறுவனம்தான், திருச்சியின் உள்ளூர் போலீஸ் உதவி செயலியான 'காவிரி காவலன்' வடிவமைத்து கொடுத்திருக்கிறது. அதுமட்டுமல்லாது, தமிழகத்தின் பல பகுதிகளில், உள்ளூர் போலீஸ் செயலியை வடிவமைத்து வழங்கியுள்ளது.

# கர்ப்பிணிகள் உயிர்காக்கும் செயலி

## மகிழ்ச்சியில் மலைகிராமங்கள்



குறிப்பாக சாலை மற்றும் போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தால், மலைகிராமங்களில் வசிக்கும் கர்ப்பிணிப் பெண்கள், பிரசவ காலத்தில் பல சிரமங்களை சந்திக்கின்றனர். உரிய நேரத்தில் மருத்துவமனை செல்ல முடியாமல் உயிரிழப்புகளும் நிகழ்கின்றன. இவர்களுக்காக மதுரையைச் சேர்ந்த 'சேவ் மாம்' என்ற ஸ்டார்ட் அப் நிறுவனம், கருவி ஒன்றை உருவாக்கியுள்ளது. மலைகிராமங்களில் இருக்கும் கர்ப்பிணிப் பெண்களின் உடல்நிலையை இந்த பிரத்யேக கருவி கண்காணிக்கும்.

மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களின் 300 மலை கிராமங்களைச் சேர்ந்த 30 ஆயிரம் கர்ப்பிணிகளுக்கு, அந்தக் கருவி வழங்கப்பட்டு, அவர்கள் உடல்நிலை கண்காணிக்கப்பட்டு, உரிய நேரத்தில் மருத்துவமனை செல்ல 'அலர்ட்' செய்யப்பட்டிருக்கிறது.

சேவ் மாம் நிறுவனத்தைச் சேர்ந்த தினேஷ் பாண்டியனிடம் பேசினோம். கூடுதல் விபரங்களை தந்தார் அவர்.

"2017ம் ஆண்டு எங்கள் நிறுவனத்தை ஆரம்பித்தோம். மலைகிராம கர்ப்பிணிகளுக்கு உரிய நேரத்தில் மருத்துவ உதவி கிடைக்கும் வகையில், ரத்த அழுத்தம், இதயத்துடிப்பு, சர்க்கரை அளவு உட்பட 10 வகையான பரிசோதனைகள் செய்யும் கருவி ஒன்றை உருவாக்கினோம். பாசி வடிவில் இருக்கும் இதை கையில், அல்லது கழுத்தில் அணிந்து கொள்ளலாம்.

உள்ளூர் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், கிராம செவிலியர்கள், அந்தந்த மாநில சுகாதாரத்துறை, தேசிய சுகாதார இயக்கம் ஆகியவற்றின் உதவியுடன், மலைகிராமங்களுக்குச் சென்று கர்ப்பிணிகளுக்கு இந்தக் கருவியை வழங்கினோம். மலைகிராமங்களில் பெரும்பாலும் நெட் ஒர்க் இருக்காது. அதனால், அந்தக் கருவி சேகரிக்கும் தகவல்கள் கிராம செவிலியர் அல்லது தன்னார்வலர்கள் கொண்டு செல்லும் ரிசீவரில் ஆப்லைன் மோடில் பதிவாகிவிடும்.

அந்த ரிசீவர் நெட் ஒர்க் உள்ள பகுதிக்கு வந்தவுடன், அதில் உள்ள தகவல்கள் எங்களுக்கு கிடைத்துவிடும். அந்தத் தகவல்களின் அடிப்படையில் கர்ப்பிணிகளுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்குவோம். இவை அனைத்தையும் ஒரு செயலி மூலம், அப்பகுதி மாவட்ட கலெக்டரால் கண்காணிக்க முடியும்" என்ற தினேஷ் பாண்டியன் தொடர்ந்து பேசினார்.



தினேஷ் பாண்டியன்

"கர்ப்பிணிகள் வசிப்பது அடர்ந்த காட்டுப்பகுதியாக இருந்தால், பிரசவ தேதிக்கு 2 நாட்களுக்கு முன்னரே மருத்துவமனைக்குச் செல்ல அறிவுறுத்தி விடுவோம். இதன்மூலம், ரத்தப்போக்கினால் ஏற்படும் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டது. இந்தக் கருவி, கர்ப்ப காலத்தில் தொடங்கி குழந்தை பிறந்து, குழந்தைக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளதா, குழந்தையின் எடை, அடுத்த தடுப்பூசிக்கான நாள் என்று முதல் ஆயிரம் நாட்கள் வரை தொடர்ந்து கண்காணிக்கும்.

தமிழகத்தைப் பொறுத்த வரை திருச்சி, தர்மபுரி, ராமநாதபுரம், நாமக்கல் போன்ற மாவட்டங்களின் சில மலைகிராம கர்ப்பிணிகளுக்கு இந்தக் கருவியை வழங்கி கண்காணித்து வருகிறோம். இதில் இன்னும் மேம்பட்ட தொழில் நுட்பங்களை இணைக்கவும் ஆய்வு செய்து வருகிறோம்.

எங்களது இந்த முயற்சி மற்றும் செயல்பாடுகள் பற்றி உலக சுகாதார நிறுவனம் தங்கள் இணையதளத்தில் கட்டுரை வெளியிட்டிருக்கிறது. கனடாவைச் சேர்ந்த அறிவியல் இதழான 'ஐவே' (ivey) எங்கள் ஆய்வுகளை வெளியிட்டுள்ளது. சிறிய ஸ்டார்ட் அப் நிறுவனமாக தொடங்கப்பட்ட சேவ்மாம் செயல்பாடுகள், பல்கலைக்கழகங்களின் எம்.பி.ஏ பாடத்திட்டத்தில் இடம்பெற இருக்கிறது" என்று பெருமையுடன் சொல்லி முடித்தார் தினேஷ் பாண்டியன்.

- எம்.கணேஷ்.